தினமணி (05.11.2019)

# 2,692 கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி

கரூர், நவ.4: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தனது புகளூர் ஆலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் நடத்திய கோமாரி நோய்த் தடுப்பூசி முகாமில், 2,692 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

கால்நடைப் பராமரிப்புத் துறையுடன் இந்த ஆலை இணைந்து கடந்த மாதம் 17-ஆம் தேதி முதல் நவம்பர் 4 (திங்கள்கிழமை) வரை, ஆலையைச் சுற்றியுள்ள மேட்டுப்பாளையம், கடம்பன்குறிச்சி, பெரியவரப்பாளையம், சின்னவரப்பாளையம், செட்டித்தோட்டம், பாண்டிப்பாளையம் உள்ளிட்ட 42 கிராமங்களில் முகாமை நடத்தியது.

வேலாயுதம்பாளையம், குப்பம், புன்னம், தளவாப்பாளையம், மண்மங்கலம் கால்நடை மருத்துவமனைகளைச் சேர்ந்த கண்ணன், பார்த்திபன், மணிகண்டன், கோபிநாத் ஆகிய கால்நடை மருத்துவர்களைக் கொண்ட குழு கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியை மேற்கொண்டது.



பாண்டிப்பாளையம் கிராமத்தில் நடைபெற்ற முகாமை பார்வையிடும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்)கிருஷ்ணன், முதன்மைப் பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன் உள்ளிட்டோர்.

பாண்டிப்பாளையத்தில் நடைபெற்ற முகாமை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மைப் பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன் உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.

இதில் 1,952 பசுக்கள், 646 எருமை மாடுகள் உள்பட மொத்தம் 2,692 கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி, ஊட்டச்சத்து மாவுகள், கால்நடை நோய் தடுப்பு மருந்துகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.